2021 செப்டம்பர் 3]

வாசலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. மூர்த்தி அவர்களோடு நானும் நேரடியாகச் சென்று பார்வையிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அரசு ஒன்றும் அதற்கு முழுமையாக நிதியை ஒதுக்கவில்லை. தனியார் பங்களிப்போடு அரசு நிதியும் சேர்த்துதான் அந்தத் திருப்பணியை எடுத்திருக்கின்றோம்.

முற்பகல் 10–35

ரூ.19 கோடி செலவில் அதற்குண்டான கற்களை அளவிடும் பணி, தயாரிக்கும் பணி, நாமக்கல்லில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தக் கல்லை நாமக்கல்லிலிருந்து இங்கே கொண்டுவரும்போது, சேதாரம் ஏற்பட்டுவிடும் என்பதால், கோயில் வளாகத்திலேயே மண்ணை நிரப்பி அதற்கென்று ஓரிடத்தை ஒதுக்கச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நீங்கள் விட்டுவிட்ட பணி என்றாலும், அது ஆன்மிகம் தொடர்புடையது. பக்தகோடிகளுக்கு மன நிறைவு வேண்டும் என்பதற்காகவே, அந்தப் பணியினை விரைவாக முடிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். இன்னும் ஓராண்டிற்குள் அந்தப் பணி நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

பயிற்சி மையம்

***192—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, 49-வது வட்டம், சோமுசெட்டித் தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தில்

போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சென்னையைப் பொறுத்தவரை, சென்னை, சாந்தோமில் இயங்கிவரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம், கிண்டியில் செயல்படும் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மாநில தொழில்நெறி வழிகாட்டு மையத்திலும், TNPSC Group-IV, Bank Exam, RRB, SSC, NET, SET போன்ற அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் நேரடி மற்றும் இணையவழி வாயிலாக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 49, சோமுசெட்டி 4-வது தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளி பழுதடைந்துள்ளதாக இடிக்கப்பட்டு, காலியாக உள்ள மாநகராட்சிப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தில் TNPSC Group-IV, Bank Exam, IAS Exam போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்பதே இந்த அரசின் நோக்கமாகும். ஆகவே, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையுடன் இணைந்து ஆலோசித்து, மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் தொழில்நெறி வழிகாட்டு மையம் அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். போற்றுதலுக்குரிய இந்த மாபெரும்

2021 செப்டம்பர் 3]

அவையில், கேள்வி நேரத்தில் எனது இராயபுரம் தொகுதிக்குத் தேவையாக, நான் இந்த அவையில் பதிந்த வினா எண் 192–ன்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கனவினை நனவாக்கி மகிழ்ந்த, சங்கத் தமிழின் சரித்திர நாயகன், எங்கள் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் வங்கக் கடல்திசை நோக்கி வணங்கி, எனது தொகுதி சார்ந்த கோரிக்கையினை, இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி, கேள்விக்கு வந்துவிடுங்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதல் முறையாக இந்த அவையில் பேசுவதால், தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லும் கடமை உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, கேள்விக்கு வந்துவிடுங்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் கேள்வி கேட்க வந்துவிடுகிறேன். முத்தமிழ்க் காவலர், கலைஞர் வழிநின்று, மக்கள் சேவையே மகேசன் சேவை என்று 24 மணி நேரமும் மக்களின் நலனையே சிந்தித்து, இன்று மக்கள் பணியில் உழைப்பு, உழைப்பு என்ற சொல்லுக்கு இலக்கணமாய்த் திகழும், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, கேள்விக்கு வந்துவிடுங்கள். கேள்வியைச் சொல்லுங்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், இரண்டு முறை எனக்குப் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்த, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், சகோதரர், மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2021 செப்டம்பர் 3

எனது தொகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 49-ல் ஒரு மாநகராட்சிப் பள்ளி இருந்தது. அது பாழடைந்த நிலையில், கடந்த 2010 ஆம் ஆண்டில் மறுசீரமைப்பு என்ற பெயரில், கட்டடங்கள் இடிக்கப்பட்டன. ஆனால், இன்றுவரை புதிய கட்டடங்கள் உருவாகுவதற்கான அடிச்சுவடே தெரியவில்லை. அந்த இடத்தில், மாணவர்களுக்கு கணினி பயிற்சி மையம் ஒன்று உருவாக்கிட புதிய கட்டடங்கள் வேண்டுமென்று என் தொகுதியைச் சார்ந்த சோமுசெட்டி தெரு, 4-வது வீட்டில் வசிக்கும் திரு. A.S. தங்கராஜ் என்பவர், கடந்த ஆண்டில் முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு மனு அளித்திருந்தார். இந்தக் கோரிக்கை மனு, கடந்த 1-9-2015 அன்று முதலமைச்சரின் தனிப் பிரிவு மனு எண் 158518 என பதிவு செய்யப்பட்டு, அந்த மனு பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த மனுவிற்கு, மாநகராட்சி கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள், 2-9-2015 ஆம் தேதியிட்ட அவரது அலுவலகக் கடிதம் எண் E32537/2015-ல், சென்னை-13, மாநகராட்சியின் பொறுப்பிலுள்ள சுமார் 3 ground நிலத்தில் மாணவ, மாணவியருக்கான பயிற்சி மையக் கட்டடம் கட்ட மதிப்பீடு கோரப்பட்டு, மன்றத் தீர்மானம் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். அதற்காக ரூபாய் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி, கேள்விக்கு வந்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் பலமுறை அதை சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசும்போதே, அந்த subject குறித்து மட்டும் பேசச் சொல்லியிருக்கிறார்கள். கேள்வி நேரத்தின்போது கேள்வியை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லவேண்டுமானால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி என்று ஒரு வார்த்தையில் நன்றி சொல்லி முடித்துவிட்டு, கடந்து செல்லுங்கள். எனவே, கேள்விக்கு வந்துவிடுங்கள், நேரத்தை வீணாக்க வேண்டாம். இதனை அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவலுக்காகச் சொல்கிறேன்.

2021 செப்டம்பர் 3]

முற்பகல் 10–40

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *சரி ஐயா, சென்னை மாநகரத்தை இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம்.* Parry's Corner*-க்கு இந்த* side, Parry's Corner*-க்கு அந்த* side *என்று பிரிக்கலாம். குறிப்பாக, வட சென்னை பகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், ஆதி திராவிட மக்களும் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதியாக இருக்கிறது. ஆனால், சாந்தோம் பகுதியில்* TNPSC Group Exam*-க்கான பயிற்சி மையங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், வட சென்னையில் அதுமாதிரியான எந்த வசதியும் இல்லை. இராயபுரம் பகுதியில் 2015 ஆம் ஆண்டிலேயே* I.A.S. *பயிற்சி மையம் அமைக்கப் பெறுவதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டது. எனவே, உடனடியாக* I.A.S. *பயிற்சி மையம் அமைக்கப் பெறுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: I.A.S. *பயிற்சி மையம் மாதிரி கேட்கிறீர்கள். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், பயிற்சி மையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். "கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்" என்ற அந்த வார்த்தைகளுக்கு இலக்கணமாக, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு, கேட்கின்ற கேள்விகளுக்கு மட்டுமல்ல, கேட்கின்ற கோரிக்கைகளுக்கெல்லாம் விடை தந்துகொண்டிருக்கின்ற ஓர் அரசாக நம்முடைய தமிழக அரசு இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.*

ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், ஒரு பயிற்சி மையம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் படித்திருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சற்றேறக்குறைய 10 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற முனைப்போடு, பல்வேறு வழிகாட்டுதல்களை எங்கள் துறைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையிலே, இந்த முயற்சி மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மொத்தம் 33 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. கிண்டியில் இருக்கின்ற தலைமையிடத்தில் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம், மாநில அளவில் இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற 33 வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் இத்தகைய பயிற்சி மையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு அளவிலே, மாநில அளவிலே பயிற்சி பெற விரும்புகின்றவர்கள், சென்னை கிண்டியில் செயல்படும் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வந்து, பதிவு செய்து அங்கே பயிற்சி பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அந்த ஏற்புரையை ஏற்று, கண்டிப்பாக வட சென்னைக்கு, மாணவர்கள் பயன்பெறும் வகையில், I.A.S., I.P.S., தேர்வு எழுதுவதற்கான ஒரு பயிற்சி மையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]